## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்

---

*[1987 ஜனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1987, ஜனவரி மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 2.70* *தபாற் செலவு : 2.30*

# 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்

[1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 26/85
1759

**முழுவுரிமைகளையும், ஒன்றிணைவுகளையும், அத்துடன் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளையும் கட்டுப்படுத்துவதற்கும், தேசிய விலைக்கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்கும் செயல்முறைப்படுத்துவதற்குமென நியாய வியாபார ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும், 1975 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கஞ்செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**கருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியதும், இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### நியாய வியாபார ஆணைக்குழுவினைத் தாபித்தல்

**நியாய வியாபார ஆணைக் குழு.**

2. (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியாய வியாபார ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஓர் ஆணைக்குழு தாபிக்கப்படல் வேண்டும் என்பதுடன், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அப்போதைக்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களை அது கொண்டமைந்ததாதலும் வேண்டும்.

**ஆணைக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல்.**

3. ஆணைக்குழுவானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையையும், பொது இலச்சினையொன்றையும் உடையதாக இருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**ஆணைக்குழு உறுப்பினர்கள்.**

4. (1) ஆணைக்குழுவானது, கைத்தொழில், சட்டம், வியாபாரம், வர்த்தகம் அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் பாந்த அனுபவத்தை உடையவர்களும் திறமையினைக் காண்பித்துள்ளவர்களும் என அமைச்சருக்குத் தோன்றுபவர்களான ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

(2) அமைச்சர், ஆணைக்குழு உறுப்பினருள் ஒருவரை ஆணைக்குழுத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள், ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலங்கள், அத்துடன் ஆணைக்குழு உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியம், ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலச்சினை என்பன தொடர்பாகப் பயனுடையவையாதல் வேண்டும்.

## பாகம் II

### ஆணைக்குழுவின் பணிகளும் தத்துவங்களும்

*ஆணைக்குழுவின் பணிகள்.*

5. ஆணைக்குழுவின் பணிகளாவன—

(அ) பதினோராம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான ஏதேனும் கருமம் தொடர்பாகப் புலனாய்வு செய்து தோதான கட்டளையினை ஆக்குதலும் ;

(ஆ) 18 ஆம் பிரிவின்கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளைப் பரிசோதனை செய்தலும், தோதான விடயங்களில் அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொருள், எந்த விலைகளுக்குமேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய தொழிற்சாலை, மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை விலைகளை நிர்ணயித்தலும், அல்லது எவ்விலையமைப்புக்கு இணங்க அத்தகைய விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அவ்விலையமைப்பைக் குறிப்பிட்டுக் காட்டுதலும்;

(இ) 23 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஓர் ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைப் பரிசோதனை செய்தலும், அத்தகைய ஆற்றுப்படுத்துகையைச் செய்யும் இயைபான முகவராண்மைக்கான அறிக்கைப்படிவத்தில் அத்தகைய கருமம் தொடர்பில் ஆலோசனை அளித்தலும் ;

(ஈ) 24 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஓர் ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைப் பரிசோதனை செய்தலும், அத்தகைய ஆற்றுப்படுத்துகையைச் செய்யும் அமைச்சருக்கான ஓர் அறிக்கைப்படிவத்தில் அத்தகைய கருமம் தொடர்பில் ஆலோசனை அளித்தலும் ; அத்துடன்

(உ) 25 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் கருமம் பற்றிப் பரிசோதனை செய்தலும் அறிக்கை இடுதலும்,

என்பனவாதல் வேண்டும்.

*ஆணைக்குழு விசேட கவனம் செலுத்த வேண்டியனவான கருமங்கள்.*

6. ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளின் கீழான அதன் பணிகளைப் பிரயோகிக்கையில், பின்வரும் கருமங்களுக்கு ஆணைக்குழு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்:—

(அ) பொருள்களின் பாவனையாளர்களினது நலன்களைப் பாதுகாத்தல் ;

(ஆ) பொருள்களின் தயாரிப்பாளர்களுக்கு அவசியமான ஊக்குவிப்புகளை ஏற்பாடுசெய்தல் ;

(இ) பொருள்களைத் தயாரித்தல் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தியுள்ள மூலதனத்துக்கு நியாயமான வருமதி வீதங்களை உறுதிப்படுத்துவதற்கான அவசியம்;

(ஈ) நாட்டின் பல்வேறு பொருளாதாரத் துறைகளுக்கிடையே மூலவளங்களைக் குறித்தொதுக்குகல் ;

(உ) பொருள்களைத் தயாரித்தல் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்தல் என்பனவற்றில் அல்லது பொருள்களைத் தயாரித்தல் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் திறமையான தொழிற்பாடு;

(ஊ) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் ;

(எ) அரசாங்கத்தின் பொருளாதார, சமூகக் கொள்கையின் வேறு குறிக்கோள்கள் ; அத்துடன்

(ஏ) அமைச்சரால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக் கூடியவையான எவையேனும் கொள்கை வழிகாட்டிகள்.

பதிவேடுகளைப் பேணிவரும்படியும், விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவும்படியும் தேவைப்படுத்துவதற்கான தத்துவம்.

7. ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களை முறையாகப் பிரயோகிப்பதற்காக அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஏதேனும் பொருளின் உற்பத்தியாளர்களையும், இறக்குமதியாளர்களையும், விநியோகத்தர்களையும், ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட சேவையை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும்—

(அ) ஆணைக்குழு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவங்களிலும் பதிவேடுகளைப் பேணி வரும்படியும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளிலும், அத்தகைய படிவங்களிலுமான விபரத்திரட்டுக்களை ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவும்படியும்,

தேவைப்படுத்தலாம்.

தகவல்களைக் கோருவதற்கு ஆணைக்குழுவிற்குள்ள தத்துவம்.

8. (1) ஆணைக்குழுவானது அல்லது ஆணைக்குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் எவரும், எழுத்திலான அறிவித்தல் மூலம், அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக, ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களைத் தகுந்த முறையில் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதக் கூடியவாறாக அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி ஆள் எவரையும் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தகவலை வெளியிடுவதிலிருந்து அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதிலிருந்து எவரேனும் ஆளைத் தடைசெய்யும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக்கொள்ளும் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆளினால் அத்தகைய தகவல் வெளிவிடப்படுதல் அல்லது அத்தகைய ஆவணம் காண்பிக்கப்படுதல், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின், அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்பாடு செய்கின்றதான ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் தடைசெய்யப்பட்டிருப்பின். ஆளெவரையும் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி ஆணைக்குழுவானது அல்லது ஆணைக்குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனுமான அலுவலர் தன் மூலம் தேவைப்படுத்துவதனை இயலச்செய்வதாக இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும் வாசித்துப் பொருள் கொள்ளப்படலாகாது.

(2) ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வெளிவிடும்படி அல்லது காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படக்கூடிய ஏதேனும் தகவலை வெளிவிடுவதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினால் தடைசெய்யப்பட்டுள்ளவிடத்து, அவரினாலான அத்தகைய வெளிவிடுதல் அல்லது காண்பித்தலானது, அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளின் மீறுகையாகக் கருதப்படலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றில் நியதிகளுக்கிணங்கியொழுகுவதில், 7 ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஒரு விபரத்திரட்டில் அடங்கியுள்ள தகவலெதுவும், அத்துடன் கொடுத்துதவப்பட்ட தகவலெதுவும் அல்லது காண்பிக்கப்பட்ட ஓர் ஆவணத்திலுள்ள உள்ளீடுகளெவையும், விடயத்திற்கேற்றாற்போல, அத்தகைய விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவும், அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும் ஆளின் சம்மதத்துடனன்றி, அல்லது ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் போதன்றி, ஆணைக்குழுவால் வெளியிடப்படலோ வேறு ஆளெவருக்கேனும் அறிவிக்கப்படலோ ஆகாது.

வளவுகளுள் பிரவேசித்து சோதனை செய்வதற்கு எவரேனும் அலுவலர்க்கு அதிகாரமளிப்பதற்கான ஆணைக்குழுவின் தத்துவம்.

9. ஆணைக்குழுவானது, 11 ஆம் பிரிவின் கீழான புலனாய்வொன்றை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானதென அது கருதுமிடத்து, நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் ஏதேனும் தொழில் கொண்டுநடாத்தப்படுவதான எவையேனும் வளவுகளுள் பிரவேசித்து சோதனை செய்வதற்கும், அத்தகைய தொழில் தொடர்பில் இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் வைத்திருக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகளையும் சோதித்து அவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும் எவரேனும் அலுவலர்க்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

10. (1) ஆணைக்குழுவானது—

விசாரணைகள், புலனாய்வுகள் என்பவற்றை நடாத்துவதற்கான தத்துவம்

(அ) இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகுமிடத்து அல்லது உசிதமாகுமிடத்து அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம்; அத்துடன்

(ஆ) பதினோராம் பிரிவின்கீழ் புலனாய்வுகளை நடாத்தலாம்.

(2) ஆணைக்குழுவானது, இப்பிரிவின்கீழ் நடாத்தப்படும் விடயத்திற்கு ஏற்ப ஒரு விசாரணையின் அல்லது புலனாய்வின் விடயப்பொருளாக அமையும் ஏதேனும் கருமத்தில் அக்கறையுள்ள பாவனையாளர்களின் கழகங்கள் அல்லது ஒழுங்கமைப்புகள் என்பனவற்றின் பிரதிநிதிகள் உட்பட்ட எல்லா ஆட்களுக்கும், விசாரிக்கப்படுவதற்கானதும், ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி அத்தகைய கருமத்துடன் இயைபானதாகவுள்ள அத்தகைய வாய்மூல அல்லது ஆவணச்சான்றை அளிப்பதற்கானதுமான சந்தர்ப்பமொன்றை அளிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆணைக்குழுவால் நடாத்தப்படும், விடயத்திற்கு ஏற்ப, ஏதேனும் விசாரணையின் அல்லது புலனாய்வின் நோக்கத்துக்காக, ஆணைக்குழுவானது—

(அ) எவரேனும் சாட்சிக்காரரைக் கட்டளைவிட்டழைக்கவும், அவரது வருகையைக் கட்டாயப்படுத்தவும் ;

(ஆ) ஆவணங்கள் காண்பிக்கப்படுதலைக் கட்டாயப்படுத்தவும்; அத்துடன்

(இ) எவரேனும் சாட்சிக்காரருக்கு ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதவும்,

மாவட்ட நீதிமன்றமொன்றுக்குள்ள எல்லாத் தத்துவங்களையும் உடையதாதல் வேண்டும்.

(4) ஆளெவரேனும்—

(அ) ஆணைக்குழுவினால் நடாத்தப்படும், விடயத்திற்கு ஏற்ப, ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது அது முடிவடைந்தபின்னர் அத்தகைய ஆணைக்குழுவை அல்லது அதன் உறுப்பினரெவரையேனும் அவமதிப்புக்குள்ளாக்கக்கூடியவாறாக, போதிய காரணமின்றி ஏதேனும் கூற்றை வெளியிடுகின்றவிடத்து ; அல்லது எதையேனும் செய்கின்றவிடத்து, அல்லது

(ஆ) ஆணைக்குழுவின் சட்டமுறையான நெறியில் தலையிடுகின்றவிடத்து ; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நடைபெறும், விடயத்திற்கு ஏற்ப, விசாரணையொன்றின்போது அல்லது புலனாய்வொன்றின் போது—

(i) ஆணைக்குழுவால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும், ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள காரணமின்றி ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்குத் தவறுகின்றவிடத்து ; அல்லது

(ii) சத்தியம் செய்வதற்கு மறுக்கின்றவிடத்து அல்லது உரிய முறையில் சத்தியம் செய்யப்பட்டிருந்து, ஆணைக்குழுவால் விடயத்திற்கேற்ப விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்

கும் எவையேனும் கருமங்கள் தொடர்பாக அவரை நோக்கிக் கேட்கப்படும் எவையேனும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள காரணமின்றி மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ; அல்லது

(iii) ஆணைக்குழுவால், விடயத்திற்கேற்ப விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் ஏதேனும் கருமத்துடன் இயைபானதாகவுள்ளதென ஆணைக்குழு அபிப்பிராயம் கொண்டுள்ளதும், அவரது உடைமையில் அல்லது தத்துவத்திலுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அவ்வாணைக்குழுவிற்குக் காண்பித்துக் காட்டுவதற்கு, ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள காரணமின்றி மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து,

அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த அவமதிப்புத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) ஆளொருவர் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த ஏதேனும் அவமதிப்புத் தவறைப் புரிந்துள்ளாரென ஆணைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, அதன் தீர்மானத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் ஒரு சான்றிதழை, ஆணைக்குழுவானது, அதன் செயலாளர்நாயகத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பச்செய்யலாம் என்பதுடன், அத்தகைய சான்றிதழொவ்வொன்றும் ஆணைக்குழுவின் தவிசாளரால் கையொப்பமிடப்படவும் வேண்டும்.

(6) எட்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, நீதிமுறைக் கவனத்துக்கெடுப்பதற்குத் தகுதியானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதும் அவமதிப்புத் தவறொன்றுக்குத் தண்டனையளிப்பதற்கான எவையேனும் நடவடிக்கைகளில், (5) ஆம் உட்பிரிவின் கீழ் கையொப்பமிடப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் ஒரு சான்றிதழாகக் கொள்ளப்படக்கூடியதான ஏதேனும் ஆவணமானது, அதன்கண் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றிய சான்றாதல் வேண்டும் என்பதுடன், அத்தீர்மானமானது ஆணைக்குழுவால் செய்யப்பட்டுள்ளதென்பதற்கு முடிவான சான்றுதலும் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்ததாகச் சார்த்தப்படும் ஏதேனும் அவமதிப்புத் தவறுக்குத் தண்டனையளிப்பதற்காக (8) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு எடுக்கப்படும் எவையேனும் நடவடிக்கைகளில், ஆணைக்குழு உறுப்பினரெவரும், அவரது சொந்தச் சம்மதத்துடன் தவிர, சாட்சிக்காரரொருவராகக் கட்டளையிட்டழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுதலாகாது.

(8) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்து புரியப்படும் ஒவ்வோர் அவமதிப்புத் தவறும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்குரியதாதல் வேண்டும்.

## பாகம் III

### ஆணைக்குழுவால் புலனாய்வு செய்யப்படுதல்

**11.** ஆணைக்குழுவானது அதன் சொந்தப் பிரேரணையின்மேல் அல்லது எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றன்பேரில், அல்லது உத்தேச ஒன்றிணைவொன்றன் விடயத்தில் எவரேனும் ஆளினால் அதற்குச் செய்யப்பட்ட வேண்டுகோளின்மேல்— ஆணைக்குழு புலனாய்வுகளை நிறைவேற்றுதல்

(அ) முழுவுரிமை நிலைமை ஒன்றிருப்பது பற்றி அல்லது அவ்வாறான நிலைமை இருப்பதற்கான சாத்தியக்கூறு பற்றி ;

(ஆ) ஒன்றிணைவு நிலைமையை உருவாக்குவது பற்றி அல்லது அவ்வாறான நிலைமையை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறு பற்றி ;

(இ) ஏதேனும் போட்டி எதிர்ப்பு நடைமுறை நிலவுவது பற்றி,

புலனாய்வு ஒன்றினை நிறைவேற்றலாம்.

**12.** பதினோராம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக, முழுவுரிமை நிலைமையொன்று, பின்வரும் சந்தர்ப்பங்களில் இருப்பதாக எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும் :— முழுவுரிமை நிலைமை.

(1) பின்வரும் விடயங்களில் ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் வழங்கல் தொடர்பாக, அதாவது—

(அ) இலங்கையில் வழங்கப்படும் அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்று வீதமானது ஒரே ஆளினாலேயே வழங்கப்படின் அல்லது ஒரே ஆளுக்கே வழங்கப்படின், அல்லது

(ஆ) இலங்கையில் வழங்கப்படும் அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்று வீதமானது ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களைக் கொண்ட அதே தொகுதியின் உறுப்பினர்களினாலேயே வழங்கப்படின் அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களைக் கொண்ட அதே தொகுதியின் உறுப்பினர்களுக்கே வழங்கப்படின், அல்லது

(இ) இலங்கையில் வழங்கப்படும் அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்று வீதமானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டமைந்த அதே தொகுதியின் உறுப்பினர்களினாலேயே வழங்கப்படின், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டமைந்த அதே தொகுதியின் உறுப்பினர்களுக்கே வழங்கப்படின், ஏதேனும் விவரணத்தினவான பண்டங்கள் தொடர்பாக இப் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்" போட்டியினால் அவர்களே பாதிக்கப்பட்டவர்களாக இருப்பினுஞ்சரி இல்லாவிடினும் சரி, அத்துடன் தயாரிப்பாளர்களாக அல்லது வழங்குநர்களாக அக்கறை கொண்டுள்ள ஆட்களுக்கிடையே அல்லது தயாரிப்பாளர்களின் அல்லது வழங்குநர்களின்

வாடிக்கையாளர்களாக அக்கறை கொண்டுள்ள ஆட்களுக் கிடையே போட்டி இருப்பினும்சரி அவ்விவரணத்தின வான பண்டங்களின் தயாரிப்பு அல்லது வழங்கல் தொடர்பாகப் போட்டியைத் தடுக்கும், மட்டுப்படுத்தும் அல்லது மாறுன வழியில் இட்டுச்செல்லும் ஏதேனும் வகையில் தத்தமது அலுவல்களை தன்னிச்சையாகவோ அல்லது அவ்வாறல்லாமலோ அத்துடன், உடன்படிக்கை மூலமாகவோ அல்லது அவ்வாறல்லாமலோ, அத்தகைய வாறு நடாத்தும் (ஒன்றேடொன்று தொடர்புபட்ட கூட் டிணைக்கப்பட்ட குழுக்களைக்கொண்ட ஒரு தொகுதியாக விராத) எவரேனும் இரண்டு அல்லது அதற்கு பேற்பட்ட ஆட்களாவர், அல்லது

(ஈ) ஓர் உடன்படிக்கை அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக் கைகள் நடைமுறையிலிருந்து, அவ்விவரணத்தினவான பண்டங்கள் இலங்கையில் வழங்கப்படுவதில்லையென்பதே அதன் விளைவாக அல்லது கூட்டுவிளைவாக இருப்பின்;

(2) பின்வரும் விடயங்களில் ஏதேனும் விவரணத்தினவான சேவைகளை வழங்குதல் தொடர்பாக, அதாவது—

(அ) அவ்விவரணத்தினவான சேவைகளை இலங்கையில் வழங்கு தலானது, விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதத்தின் அள வுக்கு, ஒரே ஆளினுலேயேயான அல்லது ஒரேயாளுக்கே யான வழங்கலாக இருப்பின், அல்லது

(ஆ) அவ்விவரணத்தினவான சேவைகளை இலங்கையில் வழங்குத லானது, விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதத்தினளவுக்கு, ஒன்றேடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களைக் கொண்ட அதே தொகுதியின் உறுப்பினர்களி னுலேயேயான வழங்கலாக அல்லது ஒன்றேடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களைக் கொண்ட அதே தொகுதியின் உறுப்பினர்களுக்கேயான வழங்கலாக இருப்பின், அல்லது

(இ) அவ்விவரணத்தினவான சேவைகளை இலங்கையில் வழங்கு தலானது, விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதத்தின் அள வுக்கு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டமைந்த அதே தொகுதியின் உறுப்பினர்களினு லேயேயான வழங்கலாக அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டமைந்த அதே தொகுதியின் உறுப்பினர்களுக்கேயான வழங்கலாக இருப் பின், ஏதேனும் விவரணத்தினவான சேவைகள் தொடர் பாக இப்பிரிவின் இப்பந்தியில் குறிப்பிடு செய்யப்படும் " இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ", போட் டியினுல் அவர்களே பாதிக்கப்பட்டுள்ளவர்களாக இருப்பி னும்சரி இல்லாவிடினுஞ்சரி, அத்துடன் எந்த ஆட்களி னுல் அல்லது எந்த ஆட்களுக்குச் சேவைகள் வழங்கப் படுகின்றனவோ அந்த ஆட்களாக அக்கறை கொண்டுள்ள ஆட்களுக்கிடையே போட்டியிருப்பினுஞ்சரி, அவ்விவர ணத்தினவான சேவைகளின் வழங்கல் தொடர்பான

போட்டியைத் தடுக்கும், மட்டுப்படுத்தும், அல்லது மாறுன வழியில் இட்டுச்செல்லும் ஏதேனும் வகையில் தத்தமது அலுவல்களைத் தன்னிச்சையாகவோ அல்லது அவ்வாறல்லாமலோ அத்துடன் உடன்படிக்கை மூலமாகவோ அல்லது அவ்வாறல்லாமலோ அத்தகையவாறு நடாத்தும் (ஒன்றொடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களைக் கொண்ட ஒரு தொகுதியாகவிராத) எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களாவர், அல்லது

(ஈ) ஓர் உடன்படிக்கை அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறையிலிருந்து, அவ்விரணத்தினவான சேவைகள் இலங்கையில் வழங்கப்படுவதில்லையென்பதே அதன் விளைவாக அல்லது கூட்டுவிளைவாக இருப்பின் ;

(3) பின்வரும் விடயங்களில் இலங்கையிலிருந்து ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பாக, அதாவது—

(அ) இலங்கையில் தயாரிக்கப்படும் அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதமானது, ஒரே ஆளினுலேயே தயாரிக்கப்படின், அல்லது

(ஆ) இலங்கையில் தயாரிக்கப்படும் அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதமானது, ஒன்றொடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களின் ஒரே தொகுதியின் உறுப்பினர்களினுலேயே தயாரிக்கப்படின,

அத்துடன் பொதுவாக இலங்கையிலிருந்து அவ்விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பாகவும். ஒவ்வொரு சந்தையும் தனித்தனியே கருதப்பட்டு அவற்றுக்கு இலங்கையிலிருந்து அவ்விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பாகவும் இப்பிரிவின் நோக்கங்களுக்காக இவ்விடயங்களில் முழுவுரிமை நிலைமையொன்று இருப்பதாக எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்,

(4) பொதுவாக இலங்கையிலிருந்து எவையேனும் விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பாக—

(அ) இலங்கையிலிருந்து அவ்விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதியை எவ்வகையிலேனும் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற அல்லது அப்பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பான போட்டியை எவ்வகையிலேனும் தடுக்கின்ற, மட்டுப்படுத்துகின்ற அல்லது மாறுன வழியில் இட்டுச் செல்கின்ற ஓர் உடன்படிக்கை அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறையில் இருப்பின் ; அத்துடன்

(ஆ) (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடு செய்யப்பட்ட அவ்வுடன்படிக்கை அல்லது விடயத்துக்கேற்றவாறு கூட்டாக அவ்வுடன்படிக்கைகள், இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதம் தொடர்பில் நடைமுறையில் இருப்பின்.

(5) ஏதேனும் குறிப்பிட்ட சந்தைக்கு இலங்கையிலிருந்து ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பாக—

(அ) அச்சந்தைக்கு அவ்விவரணத்தினவான பண்டங்களின் வழங்கலை (இலங்கையிலிருந்தாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) எவ்வகையிலேனும் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற அல்லது அப் பண்டங்களின் வழங்கல் தொடர்பான போட்டியைத் தடுக்கின்ற, மட்டுப்படுத்துகின்ற அல்லது மாறுன வழியில் இட்டுச் செல்கின்ற ஓர் உடன்படிக்கை அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறையில் இருப்பின் ; அத்துடன்

(ஆ) அவ்வுடன்படிக்கை அல்லது விடயத்துக்கேற்றவாறு கூட்டாக (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட அவ்வுடன்படிக்கைகள் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற அவ்விவரணத்தினவான எல்லாப் பண்டங்களினதும் விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதம் தொடர்பில் நடைமுறையில் இருப்பின் ;

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் வழங்கல் ;

(ஆ) ஏதேனும் விவரணத்தினவான சேவைகளின் வழங்கல் ; அத்துடன்

(இ) ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதி

ஆகியன தொடர்பாக விதித்துரைக்கப்பட்ட "நூற்றுவீதம்" என்பது, ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல் அமைச்சரால் ஆக்கப்படும ஒழுங்கு விதிகளினுல் விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நூற்றுவீதம் எனப் பொருளாகும் ; எவ்வாறுயினும், அத்தகைய நூற்றுவீதமானது, ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலின் அல்லது ஏதேனும் விவரணத்தினவான பண்டங்களின் ஏற்றுமதியின் மூன்றில் ஒன்றுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது , (6) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சருக்கு அதன் விதப்புரையினைச் செய்கையில், எவரேனும் ஆளினுல் அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களின் அதே தொகுதியினது உறுப்பினர்களால் வைத்திருக்கப்படும் சந்தைப்பங்கைப் பரிசோதித்து அத்தகைய சந்தைப்பங்கை வைத்திருப்பதன் விளைவாகப் பெறப்பட்ட சந்தை வலுவை—

(அ) சந்தையில் போட்டியாளர் ஒருவரை விலக்குவதற்கு அல்லது கணிசமான அளவு சேதப்படுத்துவதற்கு ;

(ஆ) சந்தையினுள் போட்டியாளர் ஒருவர் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு ; அத்துடன்

(இ) சந்தையில் ஆளொருவர் போட்டி முறையிலான நடத்தையில் ஈடுபடுவதைத் தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற

நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாமா என்பது பற்றி முடிபு செய்தல் வேண்டும்.

**13.** (1) பதின்மூன்றாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தாலுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, ஆளொருவர், நேரடியாக அல்லது மறைமுகமாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அல்லது வேறு எவரேனும் ஆளின் மூலதனத்தில் அல்லது சொத்துக்களில் எவையேனும் பங்குகளைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் கொண்டால் அல்லது கொள்ள உத்தேசித்தால் ஒன்றிணைவு நிலைமையொன்று இருப்பதாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் :— ஒன்றிணைவு நிலைமை.

(அ) கொள்ளலின் அல்லது உத்தேசக் கொள்ளலின் விளைவாக முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளானவர், பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான சந்தையொன்றைக் கட்டுப்படுத்தும் அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தும் நிலையொன்றில் இருப்பாராயின் அல்லது இருக்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்குமாயின் ; அல்லது

(ஆ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளானவர், பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான சந்தையொன்றைக் கட்டுப்படுத்தும் அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையில் இருக்கும் விடயமொன்றில்—

(i) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுடன் தொடர்புபட்டதான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு வேறு எவரேனும் ஆள் அல்லது வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது வேறெவரேனும் தொடர்புபட்ட ஆள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு, போட்டியாளர் ஒருவராக இருப்பாராயின் அல்லது இருக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்குமாயின் ; அத்துடன்

(ii) கொள்ளலானது அல்லது உத்தேசக் கொள்ளலானது அச்சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அதில் ஆதிக்கம் செலுத்துவதற்கு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளின் வலுவைக் கணிசமான அளவில் பலப்படுத்துமாயின் அல்லது பலப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு இருக்குமாயின்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பின்வரும் சந்தர்ப்பங்களில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளானவர் சந்தையொன்றைக் கட்டுப்படுத்தும் அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையில் இருக்கிறார் எனக் கருதப்படல் வேண்டும் :—

(அ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுடன் தொடர்புபட்ட குழுவொன்றோ (அது கூட்டிணைக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி) அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுடன் தனித்தனியே தொடர்புபட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களோ ஒன்றாகப் பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான சந்தையொன்றைக் கட்டுப்படுத்தும் அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையிருந்தால், அல்லது

(ஆ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளோ, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுடன் தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றோ அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுடன் தனித்தனியே தொடர்புபட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களோ ஒன்றாகப் பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான சந்தையொன்றைக் கட்டுப்படுத்தும் அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையிலிருந்தால்.

(3) இப்பிரிவில்—

(அ) "பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான ஒரு சந்தை" பற்றிய குறிப்பீடொன்றனது, இலங்கையில் பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான கணிசமான ஒரு சந்தை பற்றிய குறிப்பீடொன்றாகப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்; அத்துடன்

(ஆ) "பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான ஒரு சந்தையைக் கட்டுப்படுத்துவது அல்லது அதில் ஆதிக்கம் செலுத்துவது" பற்றிய குறிப்பீடொன்றனது, அச்சந்தையில் பண்டங்களின் அல்லது சேவைகளின் ஒன்றில் வழங்குநர் ஒருவராக அல்லது கொள்ளுநர் ஒருவராக அத்தகைய சந்தையொன்றைக் கட்டுப்படுத்துகின்றதற்கான அல்லது அதில் ஆதிக்கம் செலுத்துகின்றதற்கான குறிப்பீடொன்றாகப் பொருள்கொள்ளப்படல் வேண்டும்.

**போட்டி எதிர்ப்பு வழக்காறு.**

14. பதினோராம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக, ஆளொருவர் அவரது தொழில் போக்கின்போது நடத்தைப் போக்கொன்றைப் பின்பற்றுகின்றவிடத்து, அந்நடத்தைப் போக்கானது அதுவாகவோ அல்லது அவருடன் இணைந்துள்ள ஆட்களினால் பின்பற்றப்படும் நடத்தைப் போக்கொன்றுடன் சேர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும்போதோ, இலங்கையில் பண்டங்களின் தயாரிப்பு, வழங்கல் அல்லது கொள்ளல் அல்லது இலங்கையில் சேவைகளை வழங்கல் அல்லது பெற்றுக்கொள்ளல் தொடர்பாகப் போட்டியை மட்டுப்படுத்துகின்ற, மாறான வழியில் இட்டுச்செல்கின்ற அல்லது தடுக்கின்ற பயனைக்கொண்டிருந்தால் அல்லது கொண்டிருப்பதற்கு உட்கருதியிருந்தால், அல்லது கொண்டிருக்கும் சாத்தியக்கூறுடையதாகவிருந்தால், போட்டியெதிர்ப்பு வழக்காறொன்று நிலவுவதாகக் கருதப்படல் வேண்டும்.

**புலனாய்வு முடிவுற்றதன் மேல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் கட்டளை.**

15. (1) பதினோராம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கருமங்கள் அல்லது எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் நிறைவேற்றப்பட்ட புலனாய்வொன்று முடிவுற்றதன்மேல்—

(அ) முழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமை அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறு எதுவும் இருக்கின்றதெனினும் அத்தகைய முழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமை அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறு, பொதுமக்களின் நலனுக்கெதிராகத் தொழிற்படுவதில்லை அல்லது தொழிற்படுவதற்கான சாத்தியக் கூறில்லையென, அல்லது உத்தேச ஒன்றிணைவொன்றின் விடயத்தில் அத்தகைய உத்தேச ஒன்றிணைவு பொதுமக்களின் நலனுக்கெதிராகத் தொழிற்படுவதற்கான சாத்தியக்கூறில்லையென

ஆணைக்குழுவானது அபிப்பிராயப்பட்டால், ஆணைக்குழுவானது கட்டளைமூலம், அத்தகைய முழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமைக்கு அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறுக்கு அல்லது உத்தேச ஒன்றிணைவுக்கு அதிகாரமளிக்கலாம்.

பொதுமக்களின் நலனுக்கெதிராக முழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமை அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறு அல்லது உத்தேச ஒன்றிணைவு எதுவும் தொழிற்படுகின்றதா அல்லது தொழிற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றதா என்பது பற்றி இப்பந்தியின் நோக்கங்களுக்காகத் தீர்மானிக்கையில், ஆணைக்குழுவானது, புலனுப்பின் கீழுள்ள கருமத்துக்கு இயைபாக உள்ளதென அத்தகைய ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்ற எல்லாக் கருமங்களையும் அத்தகைய ஆணைக்குழு கவனத்துக்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், பின்வருவனவற்றின் விரும்பத்தகுதன்மையை விசேடமாகக் கருத்துக்கெடுத்தலும் வேண்டும் :—

(i) பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் ஆட்களுக்கிடையில் பயனுள்ள போட்டியைப் பேணுதலும் மேம்படுத்துதலும் ;

(ii) பண்டங்களினதும் சேவைகளினதும் விலை, தாம் ஆகியன தொடர்பிலும் வழங்கப்படும் பண்டங்களினதும் சேவைகளினதும் வகை தொடர்பிலும், அத்தகைய பண்டங்களினதும், சேவைகளினதும் பாவனையாளர்களினதும், கொள்வனவு செய்வோரினதும், அத்துடன் வேறு பயன்படுத்துநர்களினதும் அக்கறைகளை மேம்படுத்தல் ;

(iii) செலவுத்தொகைகளைக் குறைத்தல், புதிய தொழினுட்ப முறைகளையும் தயாரிப்புகளையும் அபிவிருத்தி செய்தல், பயன்படுத்தல் ஆகியவற்றைப் போட்டிமூலம் மேம்படுத்தல், அத்துடன் உளதாம் சந்தைகளுக்குள் புதிய போட்டியாளர்கள் பிரவேசிப்பதற்கு வசதியளித்தல் ;

(iv) கைத்தொழிற் செயற்பாடும் ஊழியமும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதைப் பேணுதலும் மேம்படுத்துதலும் ; அத்துடன்

(v) ஏற்றுமதிச் சந்தைகளில் போட்டிச் செயற்பாடுகளைப் பேணுதலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) உத்தேச ஒன்றிணைவு பொதுமக்களின் நலனுக்கு எதிராகத் தொழிற்படுவதற்கான சாத்தியம் இருக்கின்றதென ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டால், ஆணைக்குழுவானது அத்தகைய உத்தேச ஒன்றிணைவுக்கு அதிகாரமளிக்க மறுத்தல் வேண்டும் ;

(இ) முழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமை அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறு எதுவும் இருப்பதாகவும் அத்துடன் அது பொது மக்களின் நலனுக்கெதிராகத் தொழிற்படுகிறது எனவும் ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டால், ஆணைக்குழுவானது பின்வருவனவற்றுக்காகக் கட்டளைமூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும் :—

(i) பொறுப்புமுயற்சியின் அல்லது சொத்துக்களின் ஏதேனும் பாகத்தை விற்பனை செய்வதன்மூலம் அல்லது வேறு வகையில் தொழில் எதனையும் பிரித்தல் (இந்நோக்கத்துக்

காக, எவரேனும் ஓர் ஆளினல், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களால் தொழில் என்ற வகையில் கொண்டு நடாத்தப்படும் எல்லாச் செயற்பாடுகளும் தனியொரு தொழிலாகக் கணிக்கப்படலாம்), அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களின் தொகுதி எதனையும் பிரித்தல், அத்துடன் பிரித்தலைப் பயனுறுத்துவதற்கு அல்லது கணக்கிலெடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறன பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்ற அத்தகைய எல்லாக் கருமங்களுக்காகவும் :—

(அ) ஆதனத்தை, உரிமைகளை, பொறுப்புக்களை அல்லது கடப்பாடுகளைக் கைமாற்றுதல் அல்லது உரித்தாக்குதல் ;

(ஆ) பொறுப்பு அல்லது கடப்பாடு எதனையும் நிறைவேற்றல் அல்லது குறைத்தல் மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ ஒப்பந்தங்களைச் சரிப்படுத்தல் ;

(இ) எவையேனும் பங்குகளை, ஏதேனும் பங்குத் தொகுதியை அல்லது எவையேனும் பிணைப்பொறுப்புகளை உருவாக்குதல், குறித்தொதுக்குதல், ஒப்படைத்தல் அல்லது இல்லாதாக்குதல் ;

(ஈ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவும் அவற்றுக்கிணங்கவும், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கம்பெனியொன்றை அல்லது வேறு கழகத்தை அமைத்துருவாக்குதல் அல்லது ஒடுக்குதல் அல்லது ஏதேனும் கம்பெனியை அல்லது கழகத்தை ஒழுங்குபடுத்தும் புறவிதியையும் அகவிதியையும் அல்லது வேறு சாதனங்களையும் திருத்துதல் ,

(உ) ஒரு கம்பெனியை அல்லது கழகத்தை, அதன் பங்கு மூலதனத்தில், அமைப்பில் அல்லது வேறு கருமங்களில் பாதிக்கின்ற கட்டளையின் ஏற்பாடுகள், கம்பெனியால் அல்லது கழகத்தினல் எந்த அளவுக்கும் எச்சூழ்நிலைகளிலும் மாற்றப்படலாமோ அந்த அளவும் அந்தச் சூழ்நிலைகளும், அத்துடன், அவ்வாறு பாதிக்கப்பட்ட கம்பெனிகளினல் அல்லது கழகங்களினல் கட்டளையானது ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் பதிவு செய்யப்படுதலும் ;

(ஊ) எவையேனும் சட்ட நடவடிக்கைகளைத் திறத்தவர்களின் ஏதேனும் அவசியமான மாற்றத்துடன், தொடர்ந்து நடாத்துதல் ;

(ii) கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய நியதிகளின்மீதும் அத்தகைய தத்துவங்களுடனும் எவையேனும் செயற்பாடுகளை நடாத்துவதற்காக அல்லது அத்தகைய செயற்பாடுகளின் நடாத்துகையை மேற்

பார்வை செய்வதற்காக ஒன்றில் ஆளொருவரை நியமிப்பதன் மூலம் அல்லது வேறேதேனும் முறையில் அத்தகைய செயற்பாட்டைக் கொண்டுநடாத்துதல் அல்லது எவையேனும் சொத்துக்களைப் பாதுகாத்தல் ;

(iii) கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஏதேனும் போட்டியெதிர்ப்பு வழக்காறை முடிவுறுத்தல் ; அத்துடன்

(iv) மூழுவுரிமை அல்லது ஒன்றிணைவு நிலைமை அல்லது போட்டியெதிர்ப்பு வழக்காறு எதனதும் பாதகமான தாக்கங்களைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்துக்காக அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடிய வாறான அத்தகைய வேறு நடவடிக்கை.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு தொழில் ஒன்றைப் பிரித்தல் பற்றிய அந்த உட்பந்தியிலுள்ள குறிப்பீடானது, பொதுவான கட்டுப்பாட்டின் கீழுள்ளவையான தொழில் முயற்சிகளை, தொடர்புபட்ட பொறுப்புமுயற்சி எதனதும் ஏதேனும் பாகத்தை அல்லது சொத்துக்கள் எவற்றையும் விற்பனை செய்வதன் மூலம் அல்லது வேறு வழிகள்மூலம் ஒன்றோடொன்று தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்களின் தொழில் முயற்சிகளாக அவை இருப்பதன் காரணமாகவல்லாது வேறு வகையாக, தனிவேறாக்கலுக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*15 ஆம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்படுதல்.*

16. ஆணைக்குழுவினால் 15 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையெதையும் தகுதியென அது கருதுகின்றவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழு வெளியிடச் செய்யலாம்.

*மேன்முறையீடுகள்.*

17. ஆணைக்குழுவினால் 15 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றினால் இன்னலுறும் ஆளெவரும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் IV

## ஆணைக்குழுவிற்கான வேண்டுகோள்கள், ஆற்றுப்படுத்துகைகள் பணிப்புக்கள் என்பன

*குறித்த சில பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கும்படி அல்லது அவற்றின் விலையமைப்பினைக் குறிப்பிட்டுக்காட்டும்படி விலைக்கட்டுப்பாட்டாளர் ஆணைக்குழுவை வேண்டலாம்.*

18. விதித்துரைக்கப்பட்ட பொருளொன்று தவிர்ந்த ஏதேனும் பொருளுக்கு இலங்கையில் தட்டுப்பாடு நிலவுகின்றது அல்லது தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியமுண்டு என, அல்லது முதற்கூறப்பட்ட அத்தகைய பொருளின் விலையில் நியாயமற்ற ஏற்றம் ஏற்பட்டுள்ளது அல்லது ஏற்படக்கூடிய சாத்தியமுண்டு என, அல்லது அத்தகைய பொருள் எந்த விலைக்கு விற்கப்படுகின்றதோ அந்த விலை மிகையாக இருக்கின்றதென விலைக் கட்டுப்பாட்டாளருக்குத் தோன்றுமாயின், அவர் —

(அ) எந்த விலைகளுக்கு மேல் அத்தகைய பொருள் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய தொழிற்சாலை, மொத்த விற்பனை அல்லது சில்லறை விலைகளை நிர்ணயிக்கும்படி, அல்லது அத்

தகைய ஆகக்கூடிய விலைகள் எவ்விலையமைப்புக்கிணங்க நிர்ண யிக்கப்படவேண்டுமோ அவ்விலையமைப்பினைக் குறிப்பிட்டுக்காட் டும்படி ; அல்லது

(ஆ) எப்பொருள் தொடர்பில் எந்த ஆகக்கூடிய விலைகளுக்கு மேல் அத்தகைய பொருள் விற்கப்படலாகாதென நிர்ணயித்து அல் லது அத்தகைய ஆகக்கூடிய விலைகள் எவ்விலையமைப்புக் கிணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ, அவ்விலையமைப்பினைக் குறிப்பிட்டுக்காட்டி 20 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதோ அப்பொருளொன்றின் விடயத்தில், அத்தகைய கட்டளையால் நிருணயிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளை அல்லது குறிப்பிட்டுக் காட்டப்பட்ட விலை அமைப்பினை வேறுபடுத்தும்படியும்,

ஆணைக்குழுவை வேண்டலாம் :

ஆயின், விலைக்கட்டுப்பாட்டாளர், மிக்க அவசரமான விடயத்தில் பின் வருமாறு செய்வது அவசியமெனக் கருதுமிடத்து, கசெற்றில் வெளியிடப் படும் கட்டளைமூலம் அத்தகைய பொருளின் ஆகக்கூடிய விலைகளை நிருண யிக்காலம் என்பதுடன், அதே நேரத்தில் அத்தகையதான வேண்டுகோளை யும் ஆணைக்குழுவுக்கு விடுக்கலாம் ; அத்துடன் அத்தகைய கட்டளையா னது ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்படும்வரை அல்லது வேறுபடுத் தப்படும்வரை 20 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட் டளையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**பொருளொன்றிற்குக் கட்டளையினால் நிருணயிக்கப்பட்ட விலைகளை வேறுபடுத்தும்படி இயைபான முகவாண்மை ஆணைக்குழுவை வேண்டலாம்.**

19. எப்பொருள் தொடர்பில் எந்த ஆகக்கூடிய விலைகளுக்கு மேல் அத்தகைய பொருள் விற்கப்படலாகாதென நிருணயித்து அல்லது அத்த கைய ஆகக்கூடிய விலைகள் எவ்விலை அமைப்புக்கிணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அவ்விலையமைப்பினைக் குறிப்பிட்டுக் காட்டி 20 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதோ அப் பொருளின் விடயத்தில், அத்தகைய கட்டளையால் நிருணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளை அல்லது குறிப்பிட்டுக்காட்டப்பட்ட விலையமைப் பினை வேறுபடுத்தும்படி இயைபானவொரு முகவாண்மை ஆணைக் குழுவை வேண்டலாம்.

**18 ஆம் பிரிவின் கீழான அல்லது 19 ஆம் பிரிவின் கீழான வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறையும் தத்துவங்களும்.**

20. (1) பதினெட்டாம் பிரிவின்கீழான அல்லது 19 ஆம் பிரிவின் கீழான வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணைக்குழு வானது, அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றுள்ளதென்ற பொருள்படுவதும், அத்தகைய வேண்டுகோளில் அக்கறையுடைய ஆட்க ளெவரையும் அத்தகைய வேண்டுகோளின்மீதான அவர்களது கருத்துக் களையும் கருத்துரைகளையும் சமர்ப்பிக்கும்படி கோருவதுமான அறிவித்த லொன்றைக் கசெற்றில் வெளியிடுவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கருத்துக்களும் கருத்துரைகளும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய கால எல்லையுள்ளும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

(3) மேலே கூறப்பட்ட பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றின் கீழ் விடுக்கப் பட்ட வேண்டுகோளைப் பரிசோதனை செய்தபின்னரும், (2) ஆம் உட்பிரி வின்கீழ் அதன் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது விலைக்கட்டுப்

பாட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்களும், கருத்துரைகளும், எவையேனும் இருப்பின், அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னரும் அத்தகைய வேண்டுகோளானது நியாயமானதென ஆணைக்குழு திருப்திப்பட்டால்—

(அ) 18 (அ) என்னும் பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் விடயத்தில், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பொருளொன்று எந்த விலைகளுக்குமேல் விற்கப்படலாகாதோ அந்தப் பொருளின் ஆகக்கூடிய தொழிற்சாலை, மொத்த விற்பனை அல்லது சில்லறை விலைகளைக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நிருணயித்தல் வேண்டும், அல்லது அத்தகைய ஆகக்கூடிய விலைகள் எவ்விலையமைப்புக்கிணங்க நிருணயிக்கப்படவேண்டுமோ அவ்விலை அமைப்பினைக் குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 18 (ஆ) என்னும் பிரிவின்கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் விடயத்தில், அத்தகைய வேண்டுகோளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பொருள் எந்த விலைகளுக்குமேல் விற்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய தொழிற்சாலை, மொத்த விற்பனை அல்லது சில்லறை விலைகளை நிருணயிக்கும் அல்லது அத்தகைய ஆகக்கூடிய விலைகள் எவ்விலையமைப்புக்கிணங்க நிருணயிக்கப்படவேண்டுமோ அவ்விலையமைப்பினைக் குறிப்பிட்டுக்காட்டும் கட்டளையை வேறுபடுத்துதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) மூன்றும் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருளின் விற்பனை நடைபெறும் நேரம், இடம் என்பவற்றுடன் விற்கப்படவேண்டிய பொருளின் அளவு, தரம் என்பவற்றினதும் நிபந்தனைகளுட்பட அப்பொருளின் விற்பனைபற்றிய நிபந்தனைகளை விதித்துரைக்கலாம்.

(6) பதினெட்டாம் பிரிவின்கீழான அல்லது 19 ஆம் பிரிவின் கீழான வேண்டுகோளொன்று விடயத்துக்கேற்றுற்போல பொருளொன்றின் சில்லறை அல்லது மொத்த விற்பனை அல்லது தொழிற்சாலை விலைகள் தொடர்பிலானதாக மட்டும் உள்ளவிடத்து, ஆணைக்குழுவானது, எவ்விலைகளுக்கு மேல் அத்தகைய பொருள் விற்கப்படலாகாதோ விடயத்துக்கேற்றுற்போல, அப்பொருளின் ஆகக்கூடிய சில்லறை அல்லது மொத்த விற்பனை அல்லது தொழிற்சாலை விலைகளை (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றின் மூலம் நிர்ணயிக்கும் போது, அதே கட்டளைமூலம் அத்தகைய பொருள் எவ்விலைகளுக்கு மேல் விற்கப்படலாகாதோ விடயத்துக்கேற்றுற்போல அப்பொருளின் ஆகக்கூடிய மொத்த விற்பனை, தொழிற்சாலை விலைகளையும் அல்லது ஆகக்கூடிய சில்லறை, தொழில்சாலை விலைகளையும் அல்லது ஆகக்கூடிய சில்லறை, மொத்த விற்பனை விலைகளையும் நிருணயிக்கலாம்.

20 ஆம் பிரிவின் கீழான தத்துவங்களும் கடமைகளும் எக்கால எல்லையுட் பிரயோகிக்கப்படலும் நிறைவேற்றப்படலும் வேண்டுமென்பது.

21. பதினெட்டாம் பிரிவின்கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ் வேண்டுகோளொன்று ஆணைக்குழுவிற்கு விடுக்கப்படுமிடத்து, அத்தகைய வேண்டுகோள் தொடர்பில் 20 ஆம் பிரிவினால் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டு அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாத காலப்பகுதியுள் அது பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :

ஆயின், எக்கால எல்லைக்குள் அத்தகைய வேண்டுகோள் தொடர்பில் ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் அல்லது கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதை அமைச்சர் காலத்திற்குக் காலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நீடிக்கலாம்.

20 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை நீக்குவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

22. (1) அமைச்சர், 20 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையை நீக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(2) கட்டளையொன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் நீக்கப்படுமிடத்து அல்லது வேறுபடுத்தப்படுமிடத்து, அத்தகைய நீக்கம் அல்லது வேறுபாடுபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், 20 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையானது அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் செய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட எதற்கும், அல்லது அதன்கீழ் கொள்ளப்பட்ட, திரண்ட அல்லது உறப்பட்ட ஏதேனும் உரிமைக்கு, கடப்பாட்டிற்கு அல்லது பொறுப்பிற்குப், பங்கமின்றி, நீக்கப்பட்டதாக அல்லது வேறுபடுத்தப்பட்டதாக, விடயத்திற்கேற்றாற்போல, கருதப்படலும் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் அல்லது விதித்துரைக்கப்பட்ட சேவைகளின் விலையை அல்லது விதிப்பனவை வேறுபடுத்தும் விடயத்தில் ஆற்றுப்படுத்துவதற்கான கடப்பாடு.

23. (1) விதித்துரைக்கப்பட்ட பொருளொன்றின் விலையை, அல்லது விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான விதிப்பனவை வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கும் இயைபான முகவராண்மை, இந்த உத்தேசத்தை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய உத்தேசிக்கப்பட்ட விலையின் அல்லது விதிப்பனவின் வேறுபாடு பற்றிய பிரச்சினையைப் பரிசோதனைக்கென ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தலும் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க, ஆணைக்குழுவானது அத்தகைய பிரச்சினையைப் பரிசோதித்து அத்தகைய ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய ஆற்றுப்படுத்துகையைச் செய்யும் இயைபான முகவராண்மைக்கு அறிக்கை செய்தலும் வேண்டும் :

ஆயின், இயைபான முகவராண்மையானது, பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் தவிசாளர், அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றின் தலைவரொருவர், அல்லது 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சியொன்றின் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் தவிர்ந்த ஆளொருவராயின், இப்பிரிவின்கீழான ஆற்றுப்படுத்துகை எதுவும் அமைச்சரொருவரூடாக மாத்திரமே செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட பிரச்சினையெதனையும் ஆணைக்குழு பரிசோதனை செய்து அத்தகைய அமைச்சருக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய விலையின் அல்லது விதிப்பனவின் வேறுபாடு பற்றிய பிரச்சினையைப் பரிசோதித்து அதன்மீது அறிக்கையிடும்வரை இடைப்பான முகவாண்மை, விதித்துரைக்கப்பட்ட பொருளொன்றின் விலையை, அல்லது விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான விதிப்பனவை வேறுபடுத்தலாகாது :

ஆயின், இடைப்பான முகவாண்மையொன்று, அத்தகைய முகவாண்மையானது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் தவிசாளராக அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றின் தலைவரொருவராக அல்லது 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சியொன்றின் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருந்தால், மிக அவசரமான விடயத்தில் பின்வருமாறு செய்வது அவசியமெனக் கருதப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய முகவாண்மையினால் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகையின்மீது ஆணைக்குழுவிடமிருந்து அறிக்கையொன்றைப் பெறும்வரை அத்தகைய விதித்துரைக்கப்பட்ட பொருளின் விலையை அல்லது அத்தகைய விதித்துரைக்கப்பட்ட சேவைக்கான விதிப்பனவை அதிகரிக்கலாம்.

**ஆலோசனைக்கான ஆற்றுப்படுத்துகைகள்.**

24. அமைச்சரெவரேனும், தாமாக, அல்லது ஆள் எவரினாலும் அல்லது ஆட்கள் குழு எதனாலும் அவருக்குச் செய்யப்பட்ட முறையீடுகளின்மேல், ஏதேனும் பொருளின் விலை அல்லது ஏதேனும் சேவைக்கான விதிப்பனவு தொடர்பிலான பிரச்சினையெதனையும், பரிசோதித்து அறிக்கைசெய்வதற்கென ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அதற்கிணங்க, ஆணைக்குழு அத்தகைய பிரச்சினையைப் பரிசோதித்து அத்தகைய ஆற்றுப்படுத்துகையைச் செய்த அமைச்சருக்கு, அத்தகைய ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அதன் அறிக்கையை அனுப்புதலும் வேண்டும்.

**பொருள்களின் விலைகள் முதலியன தொடர்பிலான பிரச்சினைகளை ஆணைக்குழு மீளாய்வுசெய்தல் வேண்டும்.**

25. ஆணைக்குழுவானது, தாமாக அல்லது ஆளெவரினாலும் அல்லது ஆட்கள் குழு எதனாலும் செய்யப்பட்ட முறையீடுகளின்மேல், ஏதேனும் பொருளின் விலை, அல்லது ஏதேனும் சேவைக்கான விதிப்பனவு என்பன தொடர்பிலான பிரச்சினையெதனையும் மீளாய்வுசெய்து, நியாயமானதென ஆணைக்குழு கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அமைச்சருக்கு அறிக்கை செய்யலாம்.

**இச்சட்டத்தின் கீழ்செய்யப்பட்ட ஓர் அறிக்கையை வெளியிடுதல்.**

26. அமைச்சரானவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தமக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையை அல்லது அத்தகைய அறிக்கையில் செய்யப்பட்ட எவையேனும் விதப்புரைகளை, அவர் தகுதியெனக் கருதும் அத்தகைய முறையில் வெளியிடச் செய்யலாம்.

## பாகம் V

## ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

**ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம்.**

27. (1) ஆணைக்குழுவானது, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன் செயலாளர் நாயகம் ஒருவரை (அவர் இச்சட்டத்தில் "செயலாளர் நாயகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ஆணைக்குழுவுக்கு நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் செயலாளர் நாயகம், ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டுமென்பதுடன், எல்லா நேரங்களிலும் ஆணைக்குழுவின் பணிப்பின்கீழ் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) செயலாளர் நாயகத்துக்கு அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகம், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறேதேனும் காரணமாக தமது பதவிக்கான கடமைகளைப் புரிய இயலாதிருக்கும் போதெல்லாம், ஆணைக்குழு, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அத்தகைய வராமையின்போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென, வேறோர் ஆளை நியமிக்கலாம்.

ஆணைக்குழுவுக்கு அலுவலர்கள், சேவையாளர்கள், ஆலோசகர்கள் என்போரின் நியமனம்.

28. (1) ஆணைக்குழுவின் வேலையைப் புரிவதற்கு அவசியமானவர்களான அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள், ஆலோசகர்கள் என்போரை ஆணைக்குழு நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள், சேவையாளர்கள், ஆலோசகர்கள் என்போருக்கு, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

29. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டு, அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள ஆளெவரையும் ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் ஆணைக்குழுவுக்குப் புரியப்படும் சேவைக்காலப்பகுதியெதுவும், அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### ஆணைக்குழுவின் நிதியம்

**30.** (1) ஆணைக்குழுவானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். — *ஆணைக்குழுவின் நிதியம்.*

(2) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடிய எல்லாத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியமும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும், பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**31.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். — *நிதியாண்டும், கணக்குகளின் கணக்காய்வும்.*

(2) ஆணைக்குழுவின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை ஆணைக்குழு வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**32.** இச்சட்டத்திலுள்ள எதுவும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துள்ள ஏதேனும் தொழில் முயற்சிக்கு அல்லது தொழில் முயற்சி தொடர்பாக ஏற்புடையதாகாது.”. — *“இச்சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்த சில தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையனவாகா.*

## பாகம் VII

### நானாவிதமானவை

*11 ஆம் பிரிவின் கீழான முறைப்பாடுகளும் 18 ஆம், 19 ஆம் பிரிவுகளின் கீழான வேண்டுகோள்களும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் படிவத்திலிருத்தல் வேண்டும்.*

33. பதினோராம் பிரிவின்கீழ் செய்யப்படும் முறைப்பாடொவ்வொன்றும், அத்துடன் 18 ஆம் பிரிவின்கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் வேண்டுகோள் ஒவ்வொன்றும், ஆணைக்குழுவினால் அந்நோக்கத்திற்கெனத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.*

34. (அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, ஆணைக்குழுவிற்கு எதிராக வேனும் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு உறுப்பினர், அலுவலர் சேவையாளர் அல்லது ஆலோசகர் எவரினதும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக வேனும்,

குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

*ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள், ஆலோசகர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படவேண்டும் என்பது.*

35. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், ஆலோசகர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஆணைக்குழுவானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.*

36. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஆணைக்குழுவானது, அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*தவறுகளும் தண்டங்களும்.*

37. (1) எந்த ஆள்—

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை, அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது இச்சட்டத்தின்கீழ் சட்டமுறையாக கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை, அல்

லது சட்டமுறையாகச் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை மீறுகின்றாரோ அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்றாரோ; அல்லது

(ஆ) (i) ஏழாம் பிரிவின்கீழ் விடயத் திரட்டொன்றைக் கொடுக்குமாறு ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படும்போது, அவ்வாறு கொடுக்காது விடுகின்றாரோ அல்லது கொடுக்க மறுக்கின்றாரோ; அல்லது

(ii) எட்டாம் பிரிவின்கீழ் அனுப்பப்படும் அறிவித்தலொன்றின் மூலம் ஏதேனும் தகவலைக் கொடுக்குமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப் படும்போது

அத்தகவலை அவ்வாறு கொடுக்காதுவிடுகின்றாரோ அல்லது கொடுக்கமறுக்கின்றாரோ அல்லது அந்த ஆவணத்தைக் காண்பிக்காது விடுகின்றாரோ அல்லது காண்பிக்க மறுக்கின்றாரோ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அவரால் கொடுக்கப்படும் ஏதேனும் விபரத்திரட்டில் அறிந்துகொண்டே ஏதேனும் பொய்க்கூற்றைச் செய்கின்றாரோ அல்லது ஏதேனும் தகவலைக் கொடுக்குமாறு ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்படும்போது அறிந்து கொண்டே ஏதேனும் பொய்த்தகவலைக் கொடுக்கின்றாரோ; அல்லது

(ஈ) ஒன்பதாம் பிரிவின்கீழ் எவரேனும் அலுவலர் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவருக்கு முட்டுக்கட்டையாகவுள்ளாரோ,

அந்த ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) எந்த ஆள் 15 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்றாரோ அல்லது மறுக்கின்றாரோ அல்லது அத்தகைய கட்டளையை மீறிச் செயலாற்றுகின்றாரோ அந்த ஆளெவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்;

(ஆ) நீதிமன்றமானது மேலதிகமாக, 15 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தவிர்ந்ததான கட்டளையொன்று அப்பிரிவின்கீழ் எத்தொழில்

தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தொழிலை, அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அல்லது 15 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையுடன் அத்தகைய ஆள் இணங்கியொழுகும் வரை கொண்டுநடாத்துவதிலிருந்து தவிர்க்கும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம்.

(3) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எல்லா ஆட்களினதும் பெயர்களையும் முகவரிகளையும் அது தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் வெளியிடலாம் அல்லது வெளியிடச் செய்யலாம்.

(4) இச்சட்டத்தின்கீழான தவறேதுவும் ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், அலுவலர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது ஒரு குழுமமாக இருந்தால் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பணிப்பாளர், அலுவலர், அல்லது பங்காளர் எவரும் அத்தகைய தவறு தமது அறிவின்றிப் புரியப்பட்டதென, அல்லது அத்தகைய தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்குத் தாம் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(5) சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியுடனன்றி இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறிற்கான குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

38. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் எது தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சரானவர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அக்கருமங்களுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பொருள்களையும் சேவைகளையும் விதித்துரைத்தல் ;

(ஆ) ஆணைக்குழுவின் கூட்டங்கள் எந்த முறையில் கூட்டப்படுதல் வேண்டுமோ அந்த முறையை விதித்துரைத்தல் ;

(இ) ஆணைக்குழுவின் கூட்டங்களை நடாத்தும் முறையை விதித்துரைத்தல் ;

(ஈ) ஆணைக்குழுவால் நடாத்தப்படும் விசாரணைகளிலும், புலனாய்வுகளிலும் வருகைதருவதற்கு கட்டளையிட்டழைக்கப்படும் சாட்சிக்காரர்களின் செலவுகள் யாரால், எந்த முறையில் கொடுக்கப்பட வேண்டுமென்பதை விதித்துரைத்தல்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவில், அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவாப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாததான ஒழுங்குவிதியெதுவும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு நீக்கப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

30. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 42 ஆம் இலக்க, தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. நீக்கங்களும் பேணல்களும்.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்—

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவினது நிதியத்தின் வரவிற்குள்ள எல்லாப் பணங்களும் இச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதியத்திற்குக் கைமாற்றம் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று தேசிய விலைகள் ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறுதிருக்கும் எல்லா விசாரணைகளும் பரிசோதனையும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறுதிருக்கும் எல்லா விசாரணைகளும், பரிசோதனையும் என்று கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் தொடர்ந்து நடாத்தப்படவும், முடிவு செய்யப்படவும் வேண்டும் ;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று தேசிய விலைகள் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்டு அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறுதிருக்கின்றனவான, நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின் 17 ஆம், 18 ஆம் பிரிவுகளின் கீழான எல்லா

வேண்டுகோள்களும் அத்துடன் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் பிரிவுகளின்கீழ் பரிசோதனைக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளும், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட வேண்டுகோள்களும் ஆற்றுப்படுத்தப்பட்ட பிரச்சினைகளும் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படுதலும் அத்துடன் பரிசோதிக்கப்படுதலும் வேண்டும் ;

(ச) நீக்கஞ் செய்யப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேசிய விலைகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், சமர்ப்பிக்கப்பட்ட எல்லா அறிக்கைகளும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைகளாகவும், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று முடிவுறாதுள்ளவையும் தேசிய விலைகள் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் தொடுக்கப்பட்டவையுமான எல்லாக் குற்றவழக்குகளும் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தொடர்ச்சிகளாகவும், குற்றவழக்குகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஊ) தேசிய விலைகள் ஆணைக்குழுவுக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் பதிவிடு செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளும் கட்டளைகளும் ஆணைக்குழுவுக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராகப் பதிவிடுசெய்யப்பட்டன அல்லது ஆக்கப்பட்டன எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும் படலாம் ;

(எ) நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ளதும், அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராததுமான ஒழுங்குவிதியொவ்வொன்றும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் ;

(ஏ) தேசிய விலைகள் ஆணைக்குழுவின் அலுவலர்கள், சேவையாளர்கள், ஆலோசகர்கள் என்போரெல்லோரும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆணைக்குழுவின் அலுவலர்கள், சேவையாளர்கள், அத்துடன் ஆலோசகர்கள் என்போராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், தேசிய விலைகள் ஆணைக்குழுவின் கீழான அவர்களின் ஊழியத்துடன் இணைந்த நியதிகளிலும் நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறையாதனவான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகப் பதவி வகித்தலும் வேண்டும் ;

(ஐ) தேசிய விலைகள் ஆணைக்குழுவினால், ஆணைக்குழுவுடன் அல்லது ஆணைக்குழுவிற்காக உறப்பட்ட எல்லாத் தனிசுகளும், கடப்பாடுகளும், சொத்துக்களும், அத்துடன் பொறுப்புகளும், எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், அத்துடன் செய்யப்பட வேண்டுமென ஈடுபடுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும், ஆணைக்குழுவுடன் அல்லது அதற்காக உறப்பட்டனவாக, எழுதி நிறைவேற்றப்பட்டனவாக, செய்துகொள்ளப்பட்டனவாக, அத்துடன் செய்யப்படவேண்டுமென ஈடுபடுத்தப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

**1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துதல்.**

40. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில், அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "தேசிய விலைகள் ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியாய வியாபார ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில், அந்தப் பிரிவின் (ஆ) என்னும் உட்பிரிவில் உள்ள "தேசிய விலைகள் ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியாய வியாபார ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ; அத்துடன்

(3) அந்தச் சட்டத்தின் 23 ஆம் பிரிவை நீக்கிவிடுவதன்மூலம்.

**பொருள் கோடல்.**

41. இந்தச் சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"பொருள்" என்பது ஏதேனும் உணவுப்பொருள், பானம் அல்லது வணிகப்பொருள் என்று பொருளாகும் ;

"தவிசாளர்" என்பது ஆணைக்குழுத் தவிசாளராக இருப்பதற்கென அல்லது செயலாற்றுவதற்கென இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆள் என்று பொருளாகும் ;

"விலைக்கட்டுப்பாட்டாளர்" என்பது விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும் ; அத்துடன்

"இயைபான முகவராண்மை" என்பது—

(அ) ஏதேனும் பொருள் தொடர்பாக, அத்தகைய பொருளை உற்பத்தி செய்பவர், அதனை இறக்குமதி செய்பவர் அல்லது விநியோகிப்பவர் என்றும் அல்லது அத்தகைய பொருளின் விலையை நிருணயிப்பதற்குப் பொறுப்பாக வுள்ள வேறெவரேனும் ஆள் என்றும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட சேவையொன்று தொடர்பாக, பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் தவிசாளர் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றின் தலைவர் அல்லது அந்தகைய சேவையை ஏற்பாடு செய்யும் வேறெவரேனும் ஆள் என்றும்,

பொருளாகும்.

## அட்டவணை

(பிரிவு 4(3))

### ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்

1. ஆளொருவர்—

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் அபிவிருத்திச் சபையின் அல்லது ஏதேனும் உள்ளூராதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது அவ்வாறு வந்தால் ; அல்லது

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது அவ்வாறு இல்லாதொழிந்தால் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலிருக்கின்ற ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்,

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு, அல்லது அதன் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவி விலகுகை, அல்லது பதவியகற்றுகை என்பன காரணமாக முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவரது பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டால் அன்றி மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், இறப்பு, பதவி விலகுகை, பதவியகற்றுகை என்பன காரணமாகப் பதவியை வறிதாக்கியுள்ளவரான உறுப்பினரொருவருடைய இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ, அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

3. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதற்கான காரணமெதனையும் குறிப்பிடாமல் ஆணைக்குழுவின் உறுப்பினரெவரையும் அகற்றலாம். இப்பந்தியின்கீழ் எந்த உறுப்பினர் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ அந்த உறுப்பினர், கசெற்றில் கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியின்கீழான எவரேனும் உறுப்பினரின் அகற்றுகை, நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

4. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு, அப்பயன்பட எழுதப்பட்ட கடிதமூலம் எந்த நேரத்திலும் பதவி விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது, அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

5. ஆணைக்குழுவின் உறுப்பினரெவரும், இறப்பு, பதவிவிலகுகை அல்லது பதவியகற்றுகை என்பன காரணமாகப் பதவியை வறிதாக்கும் பட்சத்தில் அமைச்சரானவர், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய உறுப்பினரைப் பின்னுறுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

6. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக உடற்றுறுதியீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சரானவர், அதன்மேல், 4 ஆம் பிரிவின் (1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின்போது, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஆளொருவரை நியமிக்கலாம்.

7. ஆணைக்குழு உறுப்பினருக்கு, நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய ஊதியம் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

8. (1) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் கூட்டமொவ்வொன்றிற்கும் சமூகமளித்திருந்தால் அவரே தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் அத்தகைய கூட்டமெதற்கும் வருகைதாரதிருப்பின், கூட்டத்திற்குச் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) தவிசாளர், அல்லது அவர் வாராதவிடத்து ஆணைக்குழுக் கூட்டமெதற்கும் தலைமைதாங்குகின்ற உறுப்பினர், தமது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கும், 37 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் அமைவாக, ஆணைக்குழுவானது, அதன் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் என்பன தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

9. ஆணைக்குழுவின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர் எவரதும் நியமனத்தில் குறைபாடுள்ளமை காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலாகாது.

10. (1) ஆணைக்குழுவின் இலச்சினையானது தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினது இலச்சினையின் பிரயோகமானது, ஆணைக்குழுத் தவிசாளரின், அல்லது அத்தகைய இலச்சினையின் பிரயோகத்தை மெய்யென்று உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் வேறோர் உறுப்பினரின் கையொப்பத்தினால் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும.

11. ஆணைக்குழுவின் நடவடிக்கை எதனையும் அல்லது ஆணைக்குழுவினால் செய்யப்படவேண்டுமென உத்தேசிக்கப்படும் ஏதேனும் முடிபின் விடயப்பொருளாக அமையும், ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறையுள்ளவரான ஆணைக்குழு உறுப்பினரொருவர், ஆணைக்குழுக் கூட்டமொன்றில் தமது அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர், அத்தகைய கருமம் தொடர்பிலான எந்த நடவடிக்கையிலும் அல்லது முடிபிலும் பங்கெடுத்தலுமாகாது.

12. (1) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அவரது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருப்பின், அமைச்சர், அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) அமைச்சரானவர், அதற்கான காரணமெதனையும் குறிப்பிடாமலே, தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(3) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பும் கடிதமூலம் எந்த நேரத்திலும் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதல் வேண்டும்.

(4) இரண்டாம், மூன்றும் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தவிசாளரின் பதவிக்காலமானது அவர் ஆணைக்குழுவின் உறுப்பினராகவிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர் அரசாங்க வெளியீட்டலுவலகம் கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.